**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**அ.வ.எண். 391/2022**

**Deposition of witness of Defendant – D.W.1 (முருகன்)**

**18.03.2026**

**பிரதிவாதிகள் தரப்பு 1 வது சாட்சி முருகன் என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் பி.வா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் அசல் தான் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 இல் 3,4,5 பக்கங்களில் எனது சகோதரர் கணேசன் மேற்படி கிரையத்தை ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்துள்ளார் என என்னை குறுக்கு விசாரணை செய்ததன் அடிப்படையில் பி.வா.சா.ஆ.5 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.
2. வா.சா.ஆ.1 இல் உள்ள கணேசனின் கையெழுத்தை அவர் போட்டாரா இல்லையா என்று அவரை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி கையெழுத்தை மறுத்து கணேசன் இவ்வழக்கில் கட்சி செய்துள்ளாரா என்றால் அவர் கையெழுத்து போடவில்லை என்று சொன்னார். தான் கையெழுத்து போடவில்லை என்று கணேசன் நீதிமன்றத்தில் எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான்.
3. கணேசனின் கையெழுத்தை அவருடையதா இல்லையா என்று அவர் தான் மறுத்து கூற முடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 இல் கணேசன் கையெழுத்து போட்ட காரணத்தால் தான் அவரை சாட்சியம் அளிக்க விடாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
4. பி.வா.சா.ஆ.5 ஏற்பட்ட காலத்திலேயே அதுபற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை இரத்து செய்ய வேண்டி நானோ, எனது சகோதரரோ, சகோதரியோ நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இல்லை, நடவடிக்கை எடுத்துள்ளோம்.
5. ஒரு கிரைய ஆவணத்தை இரத்து செய்ய வேண்டுமென்றால் நீதிமன்றம் மூலம் தான் இரத்து செய்ய முடியும் என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் புதுக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்கு எண் 304/2015 ஆகும்.
6. மேற்படி வழக்கு 2019 ஆம் ஆண்டே தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நகல் மேற்படி அ.வ.எண்.314/2015 இல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். **அந்த தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த வழக்கு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை, பத்திரத்தை இரத்து செய்ய கேட்டு தாக்கல் செய்துள்ளோம். மேற்படி வழக்கு பாகப்பிரிவினை வழக்கு என்றும், பத்திரத்தை இரத்து செய்ய கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல.
7. எங்களது இதர சொத்துக்களை பொறுத்து எனது சகோதரி மற்றும் மற்றொரு சகோதரியின் வாரிசுகள் பாகம் கேட்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே எனது சகோதரிகளுக்கு தேவையான சீர்வரிசை செய்துவிட்டதால் அவர்கள் குடும்ப

சொத்துக்களில் பாகம் கேட்கவில்லை என்றால் சீர்வரிசை செய்துள்ளோம், இருந்தாலும் பாகம் கேட்கிறார்கள்.

8. நானும், எனது சகோதரிகளும் சுமூகமான உறவில் உள்ளோம் என்றால் சரிதான். எனது சகோதரி மற்றும் மற்றொரு சகோதரியின் வாரிசுகள் என்னிடம் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

9. எனது சகோதரர் கணேசனை விசாரித்தால் தான் வா.சா.ஆ.1 இல் உள்ள அவரது கையெழுத்தின் உண்மை விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. கணேசனை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் அவரை தான் கேட்கவேண்டும்.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

**திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
**சார்பு நீதிபதி, கீரனூர்.**